Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 34

செவ்வாய்க்கிழமை
30 டிசெம்பர் 2025

மார்கழி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## ஓவியர் ரமணி காலமானார்!

யாழ்ப்பாணம், டிசெ.30
ஈழத்தின் மூத்த ஓவியர்களில் ஒருவரான ரமணி என்றறியப்பட்ட, வை.சிவசுப்பிரமணியம் நேற்றுத் »11

### இலங்கையிலேயே

# மிகமோசமான குற்றவாளி டக்ளஸ் தேவானந்தாவே!

### தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் காட்டம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 30
"முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெறும் ஆயுத மோசடியுடன் மாத்திரம் தொடர்புபட்ட சாதாரண குற்றவாளி கிடையாது. அரச இயந்திரத்துடன் சேர்ந்து ஒட்டுக் குழுவாக இயங்கித் தமிழர்களுக்கு எதிரான பல நூற்றுக்கணக்கான கொலைகளுக்கும், கடத்தல்களுக்கும், காணாமல் ஆக்கல்களுக்கும், வன்புணர்வுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய சிறீலங்காவின் மிகப்பெரும் குற்றவாளிகளில் முதன்மையானவராவார் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார். »11

## டக்ளஸுக்கு உயிராபத்து; பாதுகாப்பு வழங்குங்கள்!

### கோருகின்றார் சுரேன் ராகவன்



கொழும்பு, டிசெ. 30
ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு உயிராபத்து உள்ளது.எனவே அவருக்குப் போதிய பாதுகாப்பை சிறைக்குள்ளும் இந்த »11

### ஓட்டோவில் சென்றவருக்கு

## கடைக்குள் புகுந்து கத்திக்கு குத்து!

### யாழ்.நகரில் நேற்றுமாலை விபரீதம்

யாழ்ப்பாணம், டிசெ.30
யாழ்.நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர், ஓட்டோவில் பயணித்தவர் மீது கத்தியால் குத்தி , காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில், யாழ். நகரிலுள்ள »11

## பொன்னாலைக் கண்ணன் இன்று தேரேறுகின்றார்!

யாழ்ப்பாணம், டிசெ.30
வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெறவுள் »11

### மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால்

## சுட்டுப் படுகொலைச் சம்பவம்; சூத்திரதாரி உட்பட 2 பேர் கைது!

மன்னார், டிசெ. 30
மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக , இவ்வருடமுற்பகுதியில் இருவரைத் துப்பாக்கியால் சுட்டுப்படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய »11

## 'லீசிங்' கட்ட சங்கிலி அறுப்பு; நான்குபேரை பொலிஸ் பிடிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.30
லீசிங் பணத்தைக் கட்டுவதற்காக, பெண்ணொருவரின் தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்ற நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.
யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வீதியால் நடந்து சென்று »11

## சாராயம், கொத்துரொட்டிக்காகவே தையிட்டி விகாரையில் போராட்டமாம்!

### அர்ச்சுனா எம்.பி.யின் கண்டுபிடிப்பு இது



கொழும்பு, டிசெ.30
"தையிட்டி விகாரைக்கு எதிராக தமிழ் மக்கள் போராடவில்லை. சாராயமும், கொத்து ரொட்டியும் பெறுவதற்காகவே சிலர் அங்கு சென்று போராடுகின்றனர். இது தொடர்பில் சிங்கள மக்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை." »11

"உனக்கென்னடாப்பா
நீ பைத்தியம் என்ன
வேணுமெண்டாலும்
சொல்லுவாய் எண்ட
படவசனம் தான்
நினைவுக்கு வருகுது"

## 131 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி,டிசெ.30
கிளிநொச்சி - பன்னங்கண்டியில், பாவனையற்ற காணிக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த 131 கிலோ 13 கிராம் எடையுள்ள கேரளக் »11

### ஜனவரி 3இல் வானில் அதிசயம்

விரிவு பக்கம்:-05



சிறுமியின் சாவுக்கு நீதிகோரிய போராட்டம்

## முற்றுகைக்குள் முடங்கிய முல்லை மருத்துவமனை!

முல்லைத்தீவு, டிசெ. 30
முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மருத்துவத் தவறால் உயிரிழந்தாரெனக் கூறப்படும் சிறுமி டினோஜாவுக்கு நீதி கோரி நேற்றுத் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையை முற்றுகையிட்டு பெரும் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
உணவு ஒவ்வாமையினால் »11

### டினோஜா சாவு

## இரு மருத்துவர்கள் இடைநீக்கம்!

முல்லைத்தீவு, டிசெ.30
முல்லைத்தீவு மாவட்ட மருத்துமனையில் சிறுமி டினோஜா உயிரிழந்த விவகாரம் தொடர்பில் இரண்டு மருத்துவர்கள் தற்காலிகமாக பணியில் »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| திகதி 29.12.2025 | திகதி 29.12.2025 | திகதி 29.12.2025 | திகதி 29.12.2025 | திகதி 29.12.2025 | திகதி 29.12.2025 | திகதி 29.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4300 | சீட்டிழுப்பு இலக்கம் 1367 | சீட்டிழுப்பு இலக்கம் 0326 | சீட்டிழுப்பு இலக்கம் 2406 | சீட்டிழுப்பு இலக்கம் 6058 | சீட்டிழுப்பு இலக்கம் 2088 | சீட்டிழுப்பு இலக்கம் 0174 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |
| | | | சுப்பர் இலக்கம் 23 | | | |
| வெற்றி இலக்கங்கள் 05 23 37 76 | வெற்றி இலக்கங்கள் 02 27 41 50 | வெற்றி இலக்கங்கள் 0 7 2 6 | வெற்றி இலக்கங்கள் 22 63 68 74 | வெற்றி இலக்கங்கள் 6 7 1 5 1 5 | வெற்றி இலக்கங்கள் 20 47 55 62 | வெற்றி இலக்கங்கள் 04 28 60 |
| விசேட எழுத்து H | | | | | விசேட எழுத்து L | |

# கணக்காய்வாளர் நாயகமாக தகுதியானவருக்கு நியமனம்

## குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் அரசு

**கொழும்பு,டிசெ.30**

**தனக்கு விசுவாசமானவரை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிராகரித்துள்ளது.**

ஜனாதிபதியால் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு முன்மொழியப்பட்ட பெயரை இரு தடவைகள் அரசமைப்புச்சபை நிராக ரித்துள்ளது. பொருத்தமானவரை ஜனாதிபதி பரிந்துரைக்கவில்லை எனவும், அரசியல் நியமனமே முன்மொழியப்பட்டுள்ளது எனவும் எதிரணிகள் விமர்சிக்கின்றன. கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு இன்னும் எவரும் நியமிக்கப்பட வில்லை.

இதுதொடர்பில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளதாவது

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அரசியல் நியமனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. விசுவாசி என்பதைவிடவும் திறமையுள்ள, தகுதியுள்ளவர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டுவருகின்றது. விசுவாசிகள் எனக் கூறப்படும் தரப்பினரை நியமித்து, தனிப்பட்ட நலன்களைப் பெறுவதற்குரிய தேவைப்பாடு ஜனாதிபதிக்கோ அல்லது ஆளுங்கட்சியினருக்கோ கிடையாது. நாடு சிறப்பான வழியில் பயணிப்பது சிலருக்குக் கடுப்பை ஏற்படுத்தக்கூடும்.

அதனால் தான் காலை வாருவதற்குரிய முயற்சி இடம்பெறுகின்றது. இப்படியான தடைகளைக் கண்டு நாம் அஞ்சமாட்டோம். முன்னோக்கிச் செல்வோம்-என்றார். (க-44)



# ஊடகங்களை அடக்கினால் அரசாங்கத்துக்கே ஆபத்து

## மரிக்கார் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.30

ஊடகங்களை அடக்க முற்பட்டால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் காணாமற்போக நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஊடகங்கள் தவறிழைத்தால், தவறான செய்திகளை வெளியிட்டால் அதற்கு எதிராக சாதாரண சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். ஊடகத்துறை அமைச்சிலும் முறைப்பாடு செய்யமுடியும்.

இவ்வாறு இருக்கையில் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு எதிராக,அரசாங்கம் எவ்வாறு நேரடியாக தொலைத்தொடர்பு ஆணைக்குழுவை நாடமுடியும்? இதன் மூலம் தமக்கு வெள்ளையடிப்புச் செய்யும் ஊடகங்களைப் பாதுகாத்து, தவறுகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்களை ஒடுக்குவதற்கே அரசாங்கம் முற்படுகின்றது. ஊடகம் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகும். அதனைத் தடைசெய்வதற்கு முற்பட்டால் அரசாங்கம் காணாமற்போக நேரிடும். என்றார். அதேவேளை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்றது. தகவல்களைச் சித்திரித்து, தேசிய பாதுகாப்பு மற்றும் மக்களைக் குழப்பும்வகையில் செயற்படும் ஊடகங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-44)

# ஊடகங்கள் மீது அடக்குமுறை; எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.30

டித்வா பேரிடர் தொடர்பான செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் மீதான அடக்குமுறைக்கு, எதிரணி அரசியற்கட்சிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

பிரதான எதிர்க்கட்சிகளான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. பேரிடர் தொடர்பான செய்தியை வெளியிட்ட ஊடகங்கள் மற்றும் பிற நிறுவனங்களை அரசாங்கம் அடக்குவது நியாயமற்றது. அரசாங்கத்தின் அதிகாரபூர்வச் செய்தித் தொடர்பாளராக பொலிஸ்மா அதிபர் மாறிவிட்டார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள்மீதான இத்தகைய அடக்குமுறையைத் தடுக்க எமது கட்சியால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இலங்கையை ஒரு பொலிஸ் அரசாங்கமாக மாற்றவும்,சர்வாதிகாரத்தை உருவாக்கவும் அரசாங்கம் தயாராக உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். ஊடகங்களை அடக்குவது ஆபத்தான நடவடிக்கை. கடந்த கால அரசாங்கங்கள் அனைத்தும் ஊடகங்களை அடக்கியதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (க-இ)

| சுபிரி தன சம்பத | | |
| --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | வெற்றி வாரம் 0766 |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 8 3 0 1 0 1 | |

| Super Ball (DLB) | | |
| --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 3032 | ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 36 54 65 77 |

| சனிதா (DLB) | | |
| --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கம் 18 19 22 61 | வெற்றி வாரம் 5193 |

| SASIRI (DLB) | | |
| --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | |
| வெற்றி வாரம் 0862 | வெற்றி இலக்கம் 04 43 48 | |

| லக்ன ராசி (DLB) | | |
| --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் 12 19 26 52 | சீட்டிழுப்பு வாரம் 4744 |

| KAPRUKA (DLB) | | | |
| --- | --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து A | சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கம் 15 50 67 68 | வெற்றி வாரம் 2208 |

| அத கோடிபதி (DLB) | | |
| --- | --- | --- |
| திகதி 29.12.2025 | தினம் திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 02 18 32 54 | வெற்றி வாரம் 2858 |

# ஆட்சியைக்கவிழ்க்கமுடியாது

## பிரதி அமைச்சர் நம்பிக்கை

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமே இல்லை. மக்கள் எம்மைப் பாதுகாப்பர் என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்குவரும் போது, இரு மாதங்களில் ஆட்சியைப் பிடிப்போம் என்று சஜித் பிரேமதாஸ கூறினார். ஆனால் ஒரு வருடம் கடந்து விட்டது. எதுவும் நடக்கவில்லை. எதிரணிகள் கூறுவது போல் இந்த ஆட்சியைக் கவிழ்க்கமுடியாது. மக்கள் அரசாங்கத்துடன் உள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-44)

# பெரும்பான்மைப் பலமிருந்தாலும் மக்கள் ஆதரவை இழக்கிறது அரசு

## சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.30

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருந்தாலும், மக்களது ஆதரவு குறைவடைகின்றது என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கொழும்பு மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்குக் குறைவடைந்துவருகின்றமையைப் பிரதிபலிக்கின்றது. எனவே, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

தேசிய மக்கள் சக்தியினரால், ராஜபக்சக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் போலியானவை என்று தற்போது நிரூபணமாகி வருகின்றது.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள்கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் மக்களது ஆதரவை அரசாங்கம் மேலும் இழக்கக்கூடும் - என்றார். (க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரணிலின் வழக்கை விசாரிக்க விசேட மேல்நீதிமன்ற அமர்வு!

## சட்டமா அதிபரிடம் முன்மொழிவு

**கொழும்பு, டிசெ.30**

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படவுள்ள வழக்குகளை மூவர் கொண்ட மேல்நீதிமன்ற அமர்வு முன் விசாரிக்கவேண்டுமென்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவிடம் முன்மொழிந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.**

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டது என்று தகவல் வெளியாகியுள்ளது.

நடைபெற்றுவரும் விசாரணை நடவடிக்கைகளை மறுஆய்வு செய்வதற்காக சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்கள் திலீப பீரிஸ் மற்றும் சுதர்ஷன டி சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் என்று கூறப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க மீதும், தேசபந்து தென்னக்கோன் மீதும் வழக்குகள் தாக்கல் செய்வது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்படவுள்ள வழக்குகளை மூன்று பேர் கொண்ட மேல்நீதிமன்ற அமர்வு முன் விசாரிக்கவேண்டும் என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இதுதொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)



## இறப்பர் உற்பத்தி தொழிற்சாலையில் பெரும் தீப்பரவல்

கொழும்பு, டிசெ.30

ஹொரணை வவுலகலப் பகுதியில் உள்ள இறப்பர் பொருள்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை பெரும் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

ஹொரணை தீயணைப்புப் படையினர், பிரதேச மக்கள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## வெள்ள இடர் நிவாரணத்துக்கான உலர் உணவுப்பொதிகள் திருட்டு

கொழும்பு, டிசெ.30

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட, கற்பிட்டி மண்டலக்குடா மக்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த 55 உலர் உணவுப்பொதிகள் திருடப்பட்டுள்ளன. மண்டலகுடா கிராம அலுவலர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, கற்பிட்டிப் பொலிஸார் இதுதொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மண்டலகுடா கிராம மக்களுக்கு கடந்த 25ஆம் திகதி விநியோகிக்கப்பட்டு எஞ்சிய உலர் உணவுப் பொதிகளில், 181 பொதிகள் கிராமத்திலுள்ள மரண விசாரணை அதிகாரி ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் வைக்கப்பட்டிருந்தன. அவரது வீட்டின் கூரை ஓடுகளை அகற்றி, சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 55 உலர் உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன என்று கிராம அலுவலர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (க-இ)



## பொலிஸ் அதிகாரி பணி இடைநீக்கம்

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில், கம்பஹா பொலிஸ் தலைமையகத்தின் குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். திருடப்பட்ட தங்கநகையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, சட்டநடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக, 3 இலட்சம் ரூபா பணம் மற்றும் முக்கால் பவுண் தங்கநகையை சந்தேகநபரான பொலிஸ் பொறுப்பதிகாரி இலஞ்சமாகக் கோரியுள்ளார். 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை சந்தேகநபரிடம் வீதியில் வைத்துப் பெற்றபோது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய புலனாய்வு ஆணைக்குழு அதிகாரிகளால், குறித்த பொறுப்பதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார். அதையடுத்து அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (க-இ)

## வீதி விபத்துகளில் 2,692 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.30

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 2 ஆயிரத்து 545 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யு. ஜி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நடந்த வீதி விபத்துகளில் 2 ஆயிரத்து 692 பேர் உயிரிழந்துள்ளனர். 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு அதிகளவான வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன-என்றார். (எ-இ)

## கூட்டமா? பிக்பாஸ் வீடா?

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுறது எண்டுதான் இவ்வளவு நாளும் கேள்விப்பட்டிருப்பியள். இப்ப என்னெண்டால், இடுப்பையும் கிள்ளி கூட்டத்தையும் குழப்பிற சங்கதியளைத்தான் பாக்க வேண்டியிருக்குது. உந்தக் கோதாரி விழுந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில நடக்கிற குறளிவித்தையளைப் பாக்கேக்கதான், எங்கட அரசியல்வாதியளை விடவும் றோட்டில புசத்திற குடிகாரர் எவ்வளவோ பரவாயில்லை எண்டது தெரியவருகுது. கூட்டமெண்டால் ஒரு ஒழுங்கு இருக்கோணும், என்ன கதைக்கோணும் எண்ட திட்டம் இருக்கோணும், கூச்சல் குழப்பம் வந்தால் அதைக் கட்டுப்படுத்தி மாவட்டத்தின்ர அபிவிருத்தியைப் பற்றி குறிப்பிட்ட நேரத்துக்க நிகழ்ச்சிநிரலில சொல்லுப்பட்ட எல்லா விசயத்தையும் கதைச்சுப்பேசி முடிவெடுக்கிற வல்லமை இருக்கோணும். ஆனால் இதொண்டுமில்லாத ஒருத்தரை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்குத் தலைவராக்கினால், ஊசிக்கார எம்.பி. மாதிரி எல்லாரும் கூச்சல் போட்டு, கூவடிச்சுக் குழப்பத்தானே செய்வினம்.

இந்தமுறை யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைப் பார்த்த எல்லாருக்குமே இப்பிடியொரு கூட்டத்தை நடத்தத்தான் வேணுமோ? எண்ட கேள்வி வந்திருக்கும். எந்த விசயத்தை எடுத்தாலும், ஏன் எதுக்கெண்டு இல்லாமல் ஊசிக்கார எம்.பி. ஊளையிடத் துடங்கிடுவார். அப்பிடி ஊளையிடேக்க பக்கத்தில இருக்கிற வேற ஆரும் எம்.பி.மாரையும் உறண்டை இழுப்பார். பதிலுக்கு அவையும் பேசாமல் இருக்காமல், தாங்களும் திருப்பிக் குரைக்க வெளிக்கிட, அங்க நிக்கிற அதிகாரிமாரும், சனங்களும் காதைப்பொத்திக் கொண்டு வெளியில ஓடுறதைவிட வேறவழியே இல்லை. அதோட இந்தமுறை எல்லா எம்.பி.மாரின்ர மைக்கும் ஒரே நேரத்தில 'ஒன்' பண்ணிக் கிடந்ததால, எல்லாரும் ஒரே நேரத்தில கத்த மண்டபமே அதிரத் தொடாங்கிட்டுது. கூட்டமெண்டால் ஒரு நேரத்தில ஒருத்தர்தான் கதைக்கோணும். அதுக்கேத்தமாதிரி கதைக்கிற ஆளின்ர மைக்கை மட்டும் 'ஒன்' பண்ணிட்டு, மற்றவையின்ரைய –நிப்பாட்டி வைச்சிருந்தாலே அண்டையான் கூட்டத்தில அரைவாசிக் குழப்பத்தை இல்லாமல் செய்திருக்கலாம்.

அந்தக் கூட்டத்தின்ர குழப்பத்துக்கு எல்லாரும் ஊசிக்காரரை மட்டும் தான் குறை சொல்லுவினம். உண்மை அதில்லை. அவர் வழமையாவே அப்பிடித்தான் எண்டது எல்லாருக்கும் தெரியும். அப்பிடிப்பட்டவரை எப்பிடிக்கையாளவேணும் எண்டது கூட்டத்தை நடத்தின அமைச்சருக்குத் தெரிஞ்சிருக்கோணும். ஆனால் அவை எல்லாரும் கடிபடுறதை வேடிக்கை பார்த்துக் கொண்டு, மிக்சர் சாப்பிட்டபடி ரசிச்சாரே தவிர அதை நிப்பாட்ட ஒண்டுமே செய்யேலை. கடைசில ஊசிக்கார எம்.பி. யின்ர இடுப்பைக்கிள்ளி விளையாட்டும் காட்டினவர். இப்பிடி இடுப்பைக்கிள்ளத்தான் அவரை ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராப் போட்டவையோ? முந்தியும் கூட்டங்களில சண்டை, சச்சரவு இருந்தது தான். ஆனால் அதெல்லாம் அந்த விசயத்தோட சம்பந்தப்பட்டதாத்தான் இருக்கும். இப்ப என்னடாவெண்டால், என்னவோ விசயத்தைப் பற்றிக் கதைக்க வெளிக்கிட, அதுக்குச் சம்பந்தமேயில்லாத விசயத்தை எடுத்துக் கதைக்கிறதும், மற்ற எம்.பி.மாரை படுகேவலமாக் கதைக்கிறதும் என்ன மாதிரி டிசைன் எண்டுதான் விளங்கேலை. இப்பிடி விளங்காத கூட்டத்தில குந்தியிருந்து வேடிக்கை பாக்கிற அமைச்சருக்குப் பதிலா ஆளுமை உள்ள வேற ஆரிட்டையும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைமைப்பதவியைக் குடுத்தால் தான் இனிமேல் கூட்டம் அதுக்குரிய ஒழுங்கோட நடக்கும். இல்லாட்டி எம்.பி.மார் எல்லாரும் தங்களுக்க தாங்களே கடிபடுற பிக்பாஸ் வீடுமாதிரித்தான் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடக்கும் கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 . 09 . 1935

மறைவு 22 . 12 . 2019

## தில்லையம்பலம் அன்னபூரணம்

(பேபி அம்மா)

திதி: (30.12.2025)

ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்


ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!

இல 190/2A, குளவீதி,
பட்டக்காடு.

தில்லையம்பலம்
குடும்பத்தினர்

(CS/60315) J-1

# பதினேழாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 12 . 1935

மறைவு 07 . 01 . 2009

## அமரர் ஆண்டி முருகையா

திதி: சுவர்க்கவாயில் ஏகாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
பல ஆண்டுகள் சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

*உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்...*

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

(CS/60305) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 06 . 1939

மறைவு 28 . 12 . 2025

## சிற்றம்பலம் பரமேஸ்வரி

காரைநகர் களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் பரமேஸ்வரி அவர்கள் கடந்த (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், (ஓவசியர்) தில்லைநாதன் (UK), ஸ்ரீஸ்கந்தராசா (UK) அவர்களின் அன்புத் தாயாரும், கிருஸ்ணதேவி, சதீஸா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதீப், உசா, சிந்து, சுகன்யா, இந்துஜன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தங்கம்மா, இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
நாதன் (மகன்) - 076 007 8740
சிறி (மகன்) - +44 7786 191 794

விளானை களபூமி,
காரைநகர்.

(CS/60313) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 07.01.1975

மறைவு 29.12.2025

## சபாரத்தினம் சசிக்குமார்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சசிக்குமார் அவர்கள் நேற்று (29.12.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வில்வரத்தினம் (துரை) - புஸ்பராணி (தேவி) தம்பதியரின் அன்பு மருமகனும், வளர்மதி அவர்களின் பாசமிகு கணவரும், யனுஷன், சுவேனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகபூசணி, கருணாமூர்த்தி, விஜயா, உஷா, கேதீஸ்வரன், அமரர் சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் கெங்காதரன், ரோகினி, அமரர் அமிர்தலிங்கம், மைக்கல், ரஞ்சினி, செல்வராணி, மைதிலி, கயந்தினி, யசிந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

68/4, சட்டநாதர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 625 6397

(CS 28753) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சமணங்குளத்தில் இன்னொரு சர்ச்சை

இலங்கையின் தொல்லியல் திணைக்களம் என்பது நாட்டின் பழைமையான மரபுரிமைச் சின்னங்களை எவ்வித மாற்றமுமின்றி, அவை இருந்த நிலையிலேயே பாதுகாக்கும் புனிதமான பொறுப்பைக் கொண்ட ஒரு அரச நிறுவனமாகும். ஆனால், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்தத் திணைக்களம் வரலாற்றைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, வரலாற்றைத் திட்டமிட்டுச் சிதைப்பதற்கும் உருமாற்றுவதற்கும் முன்னெடுக்கப்படும் ஒரு கருவியாகவே மாறியிருப்பது வேதனையளிக்கிறது. வவுனியா சமணங்குளம் கல்லுமலைப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள இடிபாடடைந்த தொல்லியல் சின்னத்தை, அதன் பூர்வீகத்தன்மை சிதையாமல் பாதுகாப்பதற்குப் பதிலாக, அதனை ஒரு விகாரைத்தூபியாக உருமாற்றும் பணியில் தொல்லியல் திணைக்களம் ஈடுபட்டிருப்பது அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும். இது சட்டத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் ஒரு வரலாற்றுத் திரிபு என்பதோடு, அப்பகுதி மக்களின் மத உணர்வுகளை நசுக்கும் செயலுமாகும்.

நீண்டகாலமாக கல்லுமலைப்பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு முட்டுக்கட்டை போட்டுவந்த தொல்லியல் திணைக்களம், மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பின்னர் அண்மையில் சில தளர்வுகளை அறிவித்திருந்தது. ஆனால், அந்தத் தளர்வின் பின்னணியில் ஒரு பெரும் சதித்திட்டம் ஒளிந்திருப்பது தற்போது அம்பலமாகியுள்ளது. ஆலயக் கட்டுமானத்துக்கு அனுமதி வழங்கியமைக்கு ஈடாக, அங்கிருக்கும் மரபுரிமைச் சின்னத்தை விகாரையாக மாற்ற முனையும் இழிசெயற்பாடு கடும் கண்டனத்திற்குரியது. ஒரு வரலாற்றுச் சின்னத்தை அதன் மூலவடிவம் மாறாமல் பாதுகாப்பதே சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் நெறியாகும். அதைவிடுத்து, பௌத்த விகாரையை ஒத்த தூபிகளைப் புதிதாக நிர்மாணிப்பது என்பது வரலாற்றை மீட்டெடுப்பதல்ல, மாறாக ஒரு குறிப்பிட்ட இனத்தின் அடையாளத்தை மற்றோர் இனத்தின் பூர்வீக நிலத்தின்மீது வலுக்கட்டாயமாகத் திணிப்பதாகவே அமையும்.

நாட்டில் 'அமைப்பு மாற்றம்' என்ற முழக்கத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளபோதிலும், தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் இத்தகைய பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் எவ்விதத் தடையுமின்றித் தொடர்வது பெரும் ஏமாற்றத்தைத் தருகிறது. இயற்கை அனர்த்தங்களாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் சிதைந்து போயுள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பவேண்டிய இக்கட்டான சூழலில், அரசாங்கத்தின் முழுமையான கவனம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணுவதிலும் இருக்கவேண்டும். அதைவிடுத்து, தொல்லியல் என்ற போர்வையில் முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த அதே பேரினவாதக் கொள்கைகளைத் தற்போதைய ஆட்சியாளர்களும் மௌனமாக ஆசீர்வதிப்பது ஆரோக்கியமானதல்ல. 'டித்வா' போன்ற புயல் தாக்கங்களினால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவரும் வேளையில், இத்தகைய தேவையற்ற கட்டுமானங்களுக்காக அரச அதிகாரத்தையும் வளங்களையும் திசைதிருப்புவது கேவலமான அரசியலாகும்.

இலங்கையின் பன்மைத்துவத்தை மதிப்பதும், அனைத்து இன மக்களின் வரலாற்று அடையாளங்களையும் சமமாக கௌரவிப்பதுமே உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும். மாறாக, தொல்லியல் திணைக்களத்தைத் படைக் கருவியாகப் பயன்படுத்தி தமிழர் நிலங்களில் மத ஆக்கிரமிப்புகளைச் செய்வது நாட்டை மீண்டும் ஒரு தேவையற்ற இனமுரண்பாட்டிற்கே இட்டுச் செல்லும். சமணங்குளம் கல்லுமலைப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில் தொல்லியல் திணைக்களம் உடனடியாகத் தனது சட்டவிரோத உருமாற்றப் பணிகளைக் கைவிட வேண்டும். பழைமை வாய்ந்த சின்னங்களை அப்படியே பாதுகாக்க முன்வரவேண்டுமே தவிர, அவற்றைத் தமக்குத் தேவையானவாறு விகாரைகளாக உருமாற்றி வரலாற்றைத் திருத்தி எழுத முயலக்கூடாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இத்தகைய பிற்போக்கான நகர்வுகளைத் தடுத்து நிறுத்தி, தமிழர்களின் மத மற்றும் நில உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டியது காலத்தின் அவசியமாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## நாளொரு நல்வார்த்தை

சிந்தனையும் செயலும் ஒன்றாகிவிட்டால்
வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்றுவிடலாம்.

– ராமதாசர் –




# போதையில் சாரத்தியம் கடும் சட்டநடவடிக்கை!



### பிரதிப் பொலிஸ்மா அதிப சேனாதீர தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.30**

**மதுபோதையில் அல்லது கவனக்குறைவாக வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யு.ஜி.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.**

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்றுக் காலை நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- மதுபோதையில் அல்லது கவனக்குறைவாக வாகனத்தைச் செலுத்தினால் போக்குவரத்து விதி மீறல் என்பதற்கு மாறாகப் பெரும் குற்றச்செயல் என்ற ரீதியில் தண்டனை வழங்கப்படும். வீதி விபத்துகளுக்கு பிரதான காரணம் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவதே. அதனால் மதுபோதையில் அல்லது கவனக்குறைவாக வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (எ-இ)

## ஜனவரி 3இல் வானில் அதிசயம்

2026ஆம் ஆண்டின் முதல்பௌர்ணமிதினமான ஜனவரி 3ஆம் திகதி 'ஓநாய் சூப்பர் மூன்' (wolf super moon) நிகழ்வு வானில்தென்படும். இதனை உலகெங்கிலும் உள்ள அனைவரும் அவதானிக்கமுடியும். ஜனவரி மாதத்தில் நிலவும் கடும் பனிப்பொழிவின் போது, உணவுக்காக அலைந்து திரியும் ஓநாய்களின் சத்தம் வழக்கத்தைவிட அதிகமாகக் கேட்கும். பழங்கால நம்பிக்கைகள் மற்றும் அதன் அடிப்படையில் உருவான காரணங்களால், ஜனவரி மாத முழுநிலவை 'ஓநாய் நிலவு' என்று அழைக்கின்றனர். நிலவு பூமிக்கு அருகில் வருவதால், வழக்கமான பௌர்ணமி நிலவை விட, இது அளவில் பெரியதாகத் தெரியும். நிலவின் ஒளிவழக்கத்தைவிட மிக அதிக பிரகாசமாகவும், தெளிவாகவும் காட்சியளிக்கும். (க-இ)

## நாட்டின் பல இடங்களில் வளியின் தரம் குறைவு!

கொழும்பு, டிசெ.30

யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் வளியின் தரம் மிகக் குறைந்த மட்டத்தை அடைந்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. அடுத்த 24 மணித்தியாலங்களில் வளியின் தரச்சுட்டெண் 56 134க்கு இடையில் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலான நகரங்களில் மிதமான அளவைக் குறிக்கிறது. அதேவேளை யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், பொலநறுவை மற்றும் அநுராதபுரத்தில் சற்று ஆரோக்கியமற்ற நிலையில் வளித்தரம் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## ஈ.பி.எவ். சேவை டிஜிற்றல் மயம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகளை டிஜிற்றல் மயமாக்கும் திட்டம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், நிறுவனங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதிவு நடவடிக்கைகள் இணையவழியில்முன்னெடுக்கப்படும் என்று தொழிலாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-இ)

## குளங்களின் நீர்வழிப் பாதைகளை ஜனவரியில் ஆய்வு செய்யத் திட்டம்

கொழும்பு, டிசெ.30

டித்வா புயல் மற்றும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புகளை அடுத்து, 266 குளங்களின் நீர்வழிப் பாதைகள் ஆய்வு செய்யப்படவுள்ளன. இந்த ஆய்வுத் திட்டத்தை அடுத்த மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முக்கியமான நதிப் படுக்கைகள், நடுத்தர அளவிலான ஆறுகள் மற்றும் சேமிப்புத் தொட்டிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஆய்வில் கவனம் செலுத்தப்படும். விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள, தேவைப்பட்டால் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு (NBRO) மற்றும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்படும் என்று நீர்ப்பாசனத் துறையின் நீர் மேலாண்மைப் பணிப்பாளர் எச்.எம்.பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார். (க-இ)

நாளை
புதன்கிழமை - மார்கழி 16
31.12.2025
சுபநேரம் : 04.50 - 06.29
ராகுகாலம் : 12.20 - 01.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் –மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குத் தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரவகையில் வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச்செய்யவேண்டி வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# வெள்ளப் பாதிப்புகளைத் தடுக்க புதுக்குடியிருப்பில் வடிகாலமைப்பு

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**முல்லைத்தீவு,டிசெ.30**
**ஒவ்வோராண்டும் மழைக்காலங்களில் புதுக்குடியிருப்பு நகர் வெள்ளத்தில் மூழ்குகின்றது. இதனால் வர்த்தகர்களும், புதுக்குடியிருப்பு நகரை அண்டியுள்ள பொதுமக்களும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். எனவே நகரிலிருந்து இரணைப்பாலை வீதியினூடாக, மாத்தளன் சிறுகடல்வரை வடிகாலமைப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

புதுக்குடியிருப்புப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் இந்த முன்மொழிவை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர், புதுக்குடியிருப்பு நகரிலிருந்து இரணைப்பாலை ஊடாக மாத்தளன் சிறுகடல் 3.5 கிலோமீற்றர் தூரமாகும். எனவே வீதியின் இருபுறமும் வடிகாலமைப்பு மேற்கொள்வதனால்,7 கிலோ மீற்றர் வடிகாலமைப்புச் செய்யப்படவேண்டியிருக்கும். இதற்கு பெரும் நிதி ஒதுக்கீடு தேவைப்படும். ஏற்கனவே இந்தத் திட்ட முன்மொழிவொன்று எம்மால் தயாரிக்கப்பட்டுள்ளது- என்றார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர், பெரும் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது என்பதற்காக வடிகாலமைப்பை மேற்கொள்ளாமலிருக்க முடியாது. வடிகாலமைப்பு வசதியைக் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும். இதற்கான நிதியை அரசாங்கத்திடமிருந்து கேட்டுப்பெற்றுக்கொள்வோம். ஒரே தடவையில் மேற்கொள்ளமுடியாவிட்டால், கட்டம் கட்டமாக மேற்கொள்ளலாம். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியைப் பெற்று, முறையான திட்டமுன்மொழிவுடனும் குறித்த வடிகாலமைப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையை உரிய அமைச்சுக்கு அனுப்பிவைப்போம்-என்றார். (க)

## முற்றவெளியில் களைகட்டும் வியாபாரம்

யாழ்ப்பாணம், டிசெ.30
புத்தாண்டை முன்னிட்டு யாழ். முற்றவெளியில் நடைபாதை வியாபாரம் களைகட்டிக் காணப்படுகிறது. தென்பகுதியிலிருந்து வந்த வியாபாரிகள் முற்றவெளியில் நடைபாதை வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர். அதிகளவிலான மக்கள் அங்கு பொருள்களை வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது. (எ-41-17)

## மீன் விலை சரிவு



யாழ்ப்பாணம், டிசெ.30
யாழ்.குடாக் கடல்களில் ஒட்டி மீன்கள் அதிகளவில் பிடிபடுவதால் அவற்றின் விலை திடீரெனச் சரிந்துள்ளது. குருநகர், பண்ணை, நாவாந்துறை, பாஷையூர் ஆகிய மீன் சந்தைகளில் அதிகளவில் ஒட்டிமீன்கள் வருவதால் விலை சரிந்துள்ளது. ஒட்டி மீன்கள் கிலோ 200 ரூபாவாக விற்கப்படுகிறது. (எ-41-17)




## சம்பூர்க் கடற்கரையில் ரொக்கெட் பாகம் மீட்பு

திருமலை, டிசெ.30
சம்பூர் மலைமுந்தல் கடற்கரையில், இந்தியாவுக்குச் சொந்தமானது எனக் கருதப்படும் ரொக்கெட் அல்லது செய்மதியின் பாகம் ஒன்று நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியுள்ளது.

திருகோணமலைக் கடற்பரப்பில் மிதந்துவந்த இந்தப் பாகம், சம்பூர் மலைமுந்தல் கடற்பரப்பில் கரை ஒதுங்கியுள்ளது. இந்தப் பகுதியில் கடற்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (க-இ)

## வடக்கு சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்துக்கு புதிய தலைவர்



யாழ்ப்பாணம், டிசெ.30
வடக்கு மாகாணச் சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் புதிய தலைவராக சுற்றுலா அபிவிருத்தி ஆலோசகராகக் கடமையாற்றிய கலாநிதி. ஜெகநாதன் விவேகானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவருக்கான நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்றுத் திங்கட்கிழமை கையளித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார். (எ-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 01 . 1936



மறைவு
28 . 12 . 2025

### திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்–யாழ் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)
(தலைவர், நிறுவுனர்-உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி ஸ்மார்ட் கிட்ஸ்)

கொக்குவிலை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள் கடந்த 28.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், நிரஞ்சன் (கனடா), நிருபா (ஆசிரியர்-அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிரஷாந்தி (கனடா), அருந்தவம் (ஆசிரிய ஆலோசகர்-வலிகாம கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீத் (கனடா), பிரஜித் (கனடா), மதுரா (மாணவி- விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ரூபிகா (மாணவி - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் செல்வநாயகி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2025) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பித்து தொடர்ந்து பூதவுடல் உரும்பிராய் கிட்ஸ் பார்க்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
076 8257 881, 076 3989 321

(CS 28757) A

## மரண அறிவித்தல்

மலர்வு
03 . 08 . 1942



உதிர்வு
29 . 12 . 2025

### வைத்தீஸ்பரன் சிவசுப்பிரமணியம் (ரமணி)
(ஓய்வுபெற்ற அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர், இராமநாதன் நுண்கலைப்பீட முன்னாள் சித்திரப்பாட வருகை விரிவுரையாளர், பிரபல ஓவியர், சிற்பி, அட்டைப்பட வடிவமைப்பாளர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, கல்வியங்காடு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வை.சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (29.12.2025) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தீஸ்பரன் - மங்கயற்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - கமலாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், ராகுலன், பிரணவன், ஞானசுகாதிபன், உமாரமணன், சேரலாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதி, பாரதி, கிருபா, கிருஸ்ணவேணி, டிலூசி ஆகியோரின் அன்பு மாமனாரும், வினுஜன், பாணுஜன், ஆருஜன், ஹரிணியா, ஆர்த்திகன், கவினன்,வியனன், மயுசன், நெருசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம், விக்கினேஸ்வரன், ரகுநாயகம், பராசக்தி, சிறிராமசந்திரன், ஜெகதீஸ்வரன், ரதி, ரஜனி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் (G.P.S. விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
சி.பிரணவன் (மகன்)077 424 2327
சி.ராகுலன் (மகன்) 074 238 2667

(CS 28754) A

# மரண அறிவித்தல்

## குமாரசிங்கம் இரவீந்திரநாதன்
**(ஓய்வுபெற்ற அபிவிருத்தி கூட்டுறவு உதவி ஆணையாளர்)**



தெல்லிப்பளை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், ஓமந்தை அரச ஊழியர் அரச குடியிருப்பு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசிங்கம் இரவீந்திரநாதன் அவர்கள் நேற்று (29.12.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மோகனராஜா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், வாசுகி அவர்களின் அன்புக் கணவரும், கீர்த்தனன் (சட்டத்தரணி), பிரியங்கா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் பூந்தோட்டம் பொது மயானத்திற்கு (வவுனியா) எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

தோற்றம் 03.11.1957 மறைவு 29.12.2025

அரச ஊழியர் குடியிருப்பு
ஓமந்தை, வவுனியா.

(CS/60323) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## பொது அறிவித்தல் - 2026

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

01. **ஆதன வரி செலுத்துதல்**

2026ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை), மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்), பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் உரிய காலங்களில் செலுத்தவும். மேலும், ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் ஆண்டுக்கான வரி முழுவதும் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

02. **ஆதனப் பெயர்மாற்றம் செய்தல்**

சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு, ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும், ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருப்பின் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளவும்.

03. **காணி உப பிரிவிடுதல் / ஒருங்கிணைத்தல்**

பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போதும், ஆதனங்களை ஒன்றாக்கும் போதும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை / ஒருங்கிணைத்தலை மேற்கொள்ளவும்.

04. **கட்டட அனுமதி வழங்கல்**

(1) பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

(2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் காலநீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(3) அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக சபை உப அலுவலகத்திற்கு ஊடாக விண்ணப்பித்து அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(4) சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள் குழாய்க்கிணறுகள் என்பனவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

(5) கட்டட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முன்னர் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைக்கமைய தண்டப்பணம் அறவிடப்பட்ட பின்னரே அனுமதி வழங்க முடியும்.

05. **வீதி ஒழுங்கைப்பேணல்**

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள், மற்றும் அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

06. **வியாபார அனுமதி / வியாபார வரி - 2026**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், முச்சக்கர வண்டித்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர், தொழிற்சாலைகள் மற்றும் சேவை வழங்குனர்கள் 2026ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான / வியாபார வரி செலுத்துவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2026ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2026ஆம் திகதிக்குள் செலுத்தி 2026ம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தை / வரிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. **இறைச்சி வகைகள், மரக்கறிகள் விற்பனை**

எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டார தூரத்திற்குள் இறைச்சி வகைகள், மரக்கறிகள் என்பன விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

08. **துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக வரி**

2026ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களுக்கான வரியை மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் செலுத்தவும்.

09. **சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தின் திட்டமிடல் கிளையில் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

10. **விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2026ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2026ஆம் திகதிக்கு பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **திண்மக் கழிவுகளை அகற்றுதல்**

வீடுகள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தினை நுளம்பு பெருகுவதற்கேதுவாக சூழலை வைத்திருத்தல் / அயலாதன உடமையாளருக்கு தொல்லைகளை ஏற்படுத்தக்கூடியவாறு வைத்திருத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது நாளாந்த சமையல் கழிவுகளை உரிய வகையில் தரம் பிரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு கழிவகற்றல் நேர அட்டவணைக்கு அமைவாக வழங்கி சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள் அல்லது கழிவுகளை தரம்பிரித்து மானிப்பாய் / பண்டத்தரிப்பு / கல்லுண்டாய் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையங்களில் நேரடியாக கையளிக்க முடியும். அத்துடன், மேலதிகமான கழிவுப் பொருட்களைத் தரம் பிரித்து, பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு உரிய கட்டணங்களைச் செலுத்தி அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

12. **நீர்வழங்கல் சேவை**

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் எமது உரிய கட்டணத்தை செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

13. **கனரக வாகன சேவை**

திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (Gully Bowser) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். மேலும், வீதி உருளை, பக்கோ லோடர், டிப்பர் என்பன வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

14. **கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம்**

பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பனவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

15. **பொதுப்பயன்பாட்டு சேவைகள்**

சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் வழங்கி வருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடைய முடியும்.

16. **மயானங்கள்**

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சபைக்குரிய சுடுகாடுகளில்/ இடுகாடுகளில் பூதவுடலினை தகனம் / நல்லடக்கம் செய்வதற்காக உரிய கட்டணத்தினை எமது உப அலுவலங்களில் செலுத்தி அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளவும்.

இவ் அறிவித்தல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள் என்பவற்றை எமது உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தொலைபேசி இலக்கங்கள் :

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் | - 021 225 6647 |
| மானிப்பாய் பட்டினம் | - 021 225 5382 |
| மானிப்பாய் கிராமம் | - 021 225 5379 |
| பண்டத்தரிப்பு பட்டினம் | - 021 225 2021 |
| பண்டத்தரிப்பு கிராமம் | - 021 225 2022 |

க.யெசீதன்.
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
2025.12.30

(CR/46799) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசக முற்றோதல்

சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் வருடாந்தத் திருவாசக முற்றோதல் நிகழ்வு இல 66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது.

(அ-66)

## கணிதம்

**தரம் 1 - 11 வரையான வகுப்புகள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.**

தொடர்புகளுக்கு:-
**077 712 2968**

(CS/60317) J-1

## மணமகள் தேவை V

கனடா குடியுருமை கொண்ட தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள இதுவரை திருமணமாகாத மணமகனிற்கு பொருத்தமான மணப்பெண் தேவை
**பிறந்த ஆண்டு 1977**
**நட்சத்திரம் மிருகசீடம்**
**கிரக பாவம் 31**
**12 இல் செவ்வாய்**
தொடர்பு: **0770825595**

(CR/46802)R

## நிலைபேறான அபிவிருத்தி நோக்கிய நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் பாகம் VI பிரிவு 168 (I) இன் மூலம் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2026 ம் ஆண்டிற்குரிய நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் 18.12.2025ம் திகதிய VNPS/2025/GM/12/6/4 தீர்மானம் மூலம் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ.கிருஸ்ணவேணி திருநாவுக்கரசு
தலைவர்
வவுனியா வடக்கு பிரதேச சபை
நெடுங்கேணி

29.12.2025

(CR/46800) J-1

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

**கல்வியியல் முதுமாணி 2025/26 (அணி XVI) - யாழ்ப்பாண நிலையம்**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 25.01.2026

மேலதிக தொடர்புகளுக்கு 0212223608

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(CR/46801) J-1

## 31ம் நாள் நினைவலைகள்

தோற்றம்
04 . 11 . 1948

மறைவு
30 . 11 . 2025



கலாபூஷணம்
**சிவநாமம் சிவதாசன்**
(சமாதான நீதிவான்)

பேச்சினில் வல்லவன் மௌனத்தில் வீழ்ந்தான்
கவியாற்றும் கலைஞன் கலைத்தாயிடம் சென்றான்
கதிகலங்கி மனமுடைந்து காசினியில் நிற்கின்றோம்
உம் பிரிவின் துயரிலிருந்து மீளாது என்றும்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

45, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/60319) J-1

# புதுக்குடியிருப்பு வாசி சிறைக்குள் மரணம்

## விசாரணையில் தாக்கியமையாலேயே உயிரிழப்பென உறவினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.30

முல்லைத்தீவு,புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

சபாரட்ணம் நகுலேஸ்வரன் (உதயணன்) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கொழும்பில் கட்டுமானப்பணியில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றின் கணக்காளராக குறித்தநபர் பணியாற்றி வந்தார். வழக்கு ஒன்றுக்கு முன்னிலையாகாத காரணத்தினால் கொழும்பில் வைத்துகுற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அவர் டிசெம்பர் 10 திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார். இந்தநிலையில் அவர் சிறைக்குள் இருந்தபோது கடந்த 26 ஆம் திகதி திடீரென உயிரிழந்துள்ளார்.

விசாரணையின் போது அவர் தாக்கப்பட்டதன் காரணமாகவே குறித்தநபர் உயிரிழந்துள்ளாரென உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 135 பேருக்கு அரிசிப்பொதி

யாழ்ப்பாணம்,டிசெ.30

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால், யாழ்.மாவட்டத்தில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு, 3 இலட்சத்து 71 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசிப்பொதிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டன. குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ப 15 கிலோ, 12 கிலோ, 10 கிலோ, 7 கிலோ என்ற அடிப்படையில் அரிசிப்பொதிகள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் அரிசிப்பொதிகளை வழங்கினார். (க-66)






சாவகச்சேரி குடும்ப முன்பள்ளிகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. கோவில்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் குடும்ப முன்பள்ளியினர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க நலன்விரும்பி ஒருவரின் நிதியுதவியில் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-41-9)

# இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.30

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்வு, நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கடற்கோள், புயல், வெள்ளம் போன்ற பல்வேறு இயற்கைப் பேரிடர்களால் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக மென்பொருள் பொறியியலாளர் வி.திவாகரன் கலந்துகொண்டு இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தைத் தணிப்பதில், சூழல் பாதுகாப்பின் இன்றியமையாமை தொடர்பில் உரையாற்றினார்.

நிகழ்வின் இறுதியில் டித்வா புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 125 குடும்பங்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' திட்டத்தினூடாக உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

இதற்கான அனுசரணையை சுவிஸைச் சேர்ந்த ச. விஜயகுமார் வழங்கியிருந்தார். (க-66)





# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் மற்றும் கலைமன்றங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், ஆற்றுகைப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 14 கலைமன்றங்களுக்கு ஆற்றுகைப் பொருள்களும், 100 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் அதிதிகளால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டன.

நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (க-13,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விதையனைத்தும் விருட்சமே குழுமம், கருகம் பனை இந்து இளைஞர் மன்றம், சித்திரமேழி பழனியானந்தர் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து, வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் ஆதரவுடன், வலிகாமம் வடக்கு கீரிமலைப் பகுதி முழுவதும் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தன. (க-66)



தென்மராட்சிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன விளையாட்டுவிழா மீசாலை வீரசிங்கம் பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வுக் கான அனுசரணையினை தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் வழங்கியிருந்தது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எவ். சீ.சத்தியசோதியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக்கழகத் தலைவர் அ.கைலாயபிள்ளையும் கலந்துகொண்டனர். (ச-41-9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு 200 உணவல்லாத பொதிகளும், 100 உணவு நிவாரணப் பொருள்களும், மாவட்டச் செயலகத்தினால் 100 உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில் இவை வழங்கப்பட்டன. (ச-41-9)

# ஒழுங்குவிதிகளை மீறினால் அனுமதிகள் பறிக்கப்படும்!

### தனியார் பேருந்துகளுக்கு பருத்தித்துறை நகரசபை எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.30

பருத்தித்துறை பேருந்து நிலையப் பகுதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளுக்கு ஒழுங்குமுறைகள் வரையறுத்து விதிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீறும் பேருந்துகளுக்கான அனுமதி இரத்துச் செய்யப்படும் என்று நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் எச்சரித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கப் பிரதி நிதிகள், வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடனான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் தெற்குப் பக்கமாக தனியார் பேருந்துகள் நிறுத்தப்பட்டு, சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இதனால் அருகாமையிலுள்ள வியாபார நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில், தனியார் பேருந்துகளை குறித்த இடைவெளியில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களாக குறித்த ஒழுங்குமுறை பின்றறப்பட்டு வருகின்றது. எனினும் கடந்த இரு வாரங்களாக மீண்டும் வர்த்தக நிலையங்களை மூடி மறைத்து தனியார் பேருந்துகள் நிறுத்தப்படுகின்றன.

750, 751, 759, 762 மற்றும் முல்லைத்தீவு வழித்தடங்களில் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பேருந்துகளில், தலா ஒவ்வொரு பேருந்து என்ற அடிப்படையில் முன்னதாக குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்தி சேவையில் ஈடுபடவேண்டும்.

குறித்த ஒழுங்குமுறையை மீறி செயற்படுமிடத்து, நிகழ்விடத் தண்டப்பணம் அறவிடப்படுவதுடன் குறித்த பேருந்துக்கான அனுமதியும் இரத்துச்செய்யப்படும். எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இந்த நடைமுறை இறுக்கமாக்கப்படும் என்றும் தவிசாளர் அறிவுறுத்தினார். (க-100)

## Book keeper தேவை

(பகுதி நேரம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனமொன்றில் பகுதிநேரமாகப் பணியாற்றக் கூடிய Book keeper தேவை.

இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமும் அனுபவமும் உடையவர்கள் விரும்பத்தக்கது.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு 077 120 9998**

## சுத்திகரிப்பாளர் (பெண்) தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு சுத்திகரிப்பாளர் (பெண்) தேவை.

ஆர்வமும் அனுபவமும் உடையவர் விரும்பத்தக்கது.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு 077 522 2236**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1956

மறைவு 02 . 01 . 2023



### அமரர் திருமதி சுப்பையா பூமாதேவி

அன்பாலும் பண்பாலும் எங்களை அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் அன்புத் தாயே
ஆண்டுகள் மூன்று ஆனாலும் மனம் ஆறவில்லை தாயே
உங்களை உருக்கிய மெழுகுதிரி நீங்கள்
நீங்கள் பட்ட துன்பங்கள் மனதில் நிழலாடுகின்றன
நீங்கள் தெய்வமாய் எங்களுடனே என்றும்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


கைதடி தெற்கு, கைதடி.
0754169276

உங்கள் நினைவுகளோடு வாழும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1945

மறைவு 29 . 12 . 2025



### பாலசிங்கம் இராசநாயகி (கிச்சி)

**(இளைப்பாறிய நெசவு ஆசிரியை)**

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் இராசநாயகி அவர்கள் நேற்று (29.12.2025) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், ஊரெழு கணேச வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் வித்தகனின் அன்புத் தாயாரும், அமரர் தெய்வநாயகி, செல்வநாயகி, அமரர் கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்களான மாணிக்கம், இரத்தினம், செல்லத்துரை, செல்லம்மா, இலகுப்பிள்ளை, மற்றும் கண்மணி, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விலங்கன் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

CS 28758 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியர்...

திங்கட்கிழமை காலமானார். யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட ஓவியர் ரமணி, ஈழத்து ஓவியத் துறையில் தனக்கெனத் தனியான ஓவியப்பாணியை உருவாக்கியவர். பாடநூல்கள்,பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றில் நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்தவர். அத்துடன் தனக்கென ஓவிய மாணாக்கர் பரம்பரையையும் உருவாக்கியவர் ஓவியர் ரமணி. அண்மைக்காலமாக, நோய்வாய்ப்பட்டிருந்த ஓவியர் ரமணி நேற்று கல்வியங்காடு , விளையாட்டரங்க வீதியில் உள்ள தனது வீட்டில் இயற்கை எய்தினார். அவரது இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மிகமோசமான...

இதுதொடர்பில் அவர் நேற்றுத் திங்கட் கிழமை மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டக்ளஸ் தேவானந்தா சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டிய ஒருவர். உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் கொலைகள் உட்படக் குற்றங்களைச் சாவகாசமாகச் செய்த சர்வதேசக் குற்றவாளி. ஆளை மேட்டுக் கொலை வழக்கில் இந்திய நீதிமன்றத்தின் பகிரங்கப் பிடியாணை அவர் மீது இன்னமும் நிலுவையிலேயே உள்ளது. அவரின் கைது வெறும் கண்துடைப்பாக மாத்திரமன்றி ஆயுளுக்கும் வெளியே வராதபடி அமைந்தால் மட்டுமே சட்டவாட்சியின்பாற்பட்ட கைதாகக் கருதலாம்.

மாறாக ஒரு சில வாரங்களிலோ அல்லது ஒரு சில மாதங்களிலோ வெளியே வருவாரேயானால் பிள்ளையான், வியாழேந்திரன் வரிசையில் தமிழ்ப் புல்லுருவிகளைக் கைது செய்து சிறையிலடைத்துவிட்டு அந்தக் காலத்தினுள் குறித்த கட்சிகளின் அடியாட்களைத் தம்வசப்படுத்தும் தேசியமக்கள் சக்தி ஆட்சியாளர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் பாகமாக மட்டுமே இதனையும்பார்க்கமுடியும். பொறுத்திருந்து பார்ப்போம் - என்றுள்ளது. (அ-66)

## சுட்டுப்...

பிரதான சந்தேகநபரும், இன்னொருவரும் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணைக்காக வந்த இருவரை, பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் ஜனவரி 16 ஆம் திகதி சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர். பொலிஸாரின் கடும் பாதுகாப்பையும் மீறி, நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் நடந்த இந்தச் சூட்டுச்சம்பவம் மன்னாரை மட்டுமல்லாது முழுநாட்டையுமே உலுக்கியிருந்தது. துப்பாக்கிச் சூட்டை நடத்தி, இருவரைக் கொலைசெய்துவிட்டுத் தப்பியோடியவர்களைத் தேடும் நடவடிக்கைகளை பொலிஸார் தீவிரமாக முன்னெடுத்த போதும் இதுவரை அவர்கள் சிக்கியிருக்கவில்லை.

இந்தநிலையில், இந்தக் கொலைச்சம்பவத்தின் சூத்திரதாரியும், கொலைக்கு உடந்தையாக இருந்த நபரும் மன்னாரிலிருந்து தலைமன்னாருக்குச் செல்லும் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் மறைந்திருப்பதாகப் பொலிஸாருக்கு இரகசியத் தகவலொன்று கிடைத்தது. அதனையடுத்து, மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினரும், மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரும் இணைந்து குறித்த விடுதியை நேற்று முன்தினம் சுற்றி வளைத்தனர். விடுதியின் உள்ளே இருந்த சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்தனர். உயிலங்குளத்தைச் சேர்ந்த சந்தேகநபர்கள் இருவரும் முறையே 22 மற்றும் 38 வயதுடையவர்கள் என்று கூறப்படுகின்றது. படுகொலைச் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படுபவரின் வசமிருந்து கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-56)

## பொன்னாலைக்...

எது. இன்று காலை 08.30 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து இன்று முற்பகல்10.25 மணியளவில் சுவாமி தேரில் ஆரோகணம் செய்வார். அதனைத் தொடர்ந்து சித்திரத் தேர்ப் பவனி நடைபெறும். நண்பகல் 12 மணியளவில் பச்சை சாத்துதலைத் தொடர்ந்து சுவாமி தேரிலிருந்து அவரோகணம் செய்வாரென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-66)

## சாராயம்,...

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"தையிட்டி விகாரையை ஜனவரி 3 ஆம் திகதி உடைக்க வேண்டும் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த பிரசாரத்தை முன்னெடுக்கும் தரப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் விகாரைக்கு எதிராகப் போராடவில்லை. அரசியல் பின்புலம் உள்ளவர்களே சிலரை மூளைச்சலவை செய்து போராடத் தூண்டுகின்றனர். சாராயத்துக்கும், கொத்து ரொட்டிக்காகவும் செல்லும் கூட்டமொன்று தமிழர்களிடம் உள்ளது. ஏனைய சமூகங்களிலும் இப்படியான கூட்டம் உள்ளது.

சில தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகளை வைத்துக்கொண்டு சிங்கள மக்கள், தமிழர்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடாது.

சிங்கள மக்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு இல்லை. அவர்கள் விகாரையை உடைக்க முற்படவில்லை. சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டவர்களே இப்படிச் செயற்படுகின்றனர்.

ஜனவரி 3 ஆம் திகதி விகாரை உடைக்கப்படும் என முகநூல் நேரலையில்கூட குறிப்பிடுகின்றனர். இப்படியானவர்களுக்கு எதிராக இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை - என்று அவர் கூறினார். (அ-44)

## 131 கிலோ...

கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் நேற்றுத் திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டன. இந்தக் கஞ்சாப் பொதிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் அ[illegible]தியைச் சேர்ந்த 39 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே, இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. (அ-சு-28)

## இரு...

இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் நளின் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுமியின் சாவுக்கு நீதிகோரிப் போராடியவர்களை மருத்துவமனையின் பணிப்பாளர் நேரில் சென்று சந்தித்தார். அதன்போது போராட்டக்காரர்களால் கையளிக்கப்பட்ட மனுவினைப் பெற்றுக்கொண்ட பணிப்பாளர், இந்த விடயம் தொடர்பாக மருத்துவமனை எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார்.

" சிறுமி டினோஜாவின் உயிரிழப்பு விசாரிக்க வடமாகாண சுகாதாரத் திணைக்களம் ஆறுபேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவினர் சுமார் 12 மணித்தியாலங்கள் விசாரணை செய்துள்ளார்கள்.

அவர்களின் அறிக்கை வந்ததன் பின்னர்தான் சரியான, உறுதியான முடிவை வெளியிடலாம். எனினும் தற்போது இரண்டு மருத்துவர்களை தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்" என்று அவர் தெரிவித்தார். (அ-19)

## டக்ளஸுக்கு...

அரசாங்கம் வழங்கவேண்டும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், சுதந்திரக்கட்சியின் அரசியல்குழு உறுப்பினருமான சுரேன் ராகவன்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்பொழுது மஹர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அங்கு ஆயிரம் கைதிகள் மட்டுமே தங்கியிருக்கக்கூடிய வசதிகள் உள்ளன. ஆனால் தற்போது அங்கு மூவாயிரத்துக்கும் அதிகமான கைதிகள் உள்ளனர். டக்ளஸ் தேவானந்தா எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் பல தடவைகள் உயிர் ஆபத்துக்களை எதிர்கொண்ட ஒருவராவார். இப்போதும் அவருக்கு உயிராபத்து நீங்கவில்லை. எனவே அவருக்கான பாதுகாப்பை சிறைச்சாலைக்குள் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்" என்று சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (அ-இ)

## முற்றுகைக்குள்...

சிறுமி டினோஜா, கடந்த 21 ஆம் திகதி முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். ஆயினும் சிகிச்சையின் போது அவர் உயிரிழந்தார். இந்த சாவுக்கு மருத்துவத்தவறே காரணமெனவும், அதை மூடிமறைக்க மருத்துவமனை நிர்வாகம் முற்படுவதாகவும், சிறுமியின் சாவு தொடர்பில் நீதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் கோரியே முல்லைத்தீவில் உள்ள சமூக அமைப்புகளும், பொதுமக்களும் இணைந்து பெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நேற்று நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிகரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், சிறுமி டினோஜாவின் உருவப்படங்களையும், நீதிகோரும் வாசகங்களையும் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். ஒருகட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டதால், எவரும் மருத்துவமனைக்குள் உள்நுழையவோ, வெளியேறவோ முடியாத நிலை தோன்றியது. இதனையடுத்து மருத்துவமனையின் பணிப்பாளர் நளின் பிரேமதாஸ வெளியே வந்தபோது, அவரிடமும், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் ஆர்ப்பாட்டக்காரர்கள், சிறுமி டினோஜாவின் சாவுக்கு நீதிகோரும் மனுவைக் கையளித்த பின்னர் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

இந்த மனுவின் பிரதிகள், சுகாதார அமைச்சர்,சுகாதாரப் பணிமனையின் செயலாளர் நாயகம்,வடக்கு மாகாண ஆளுநர், மாவட்டச் செயலாளர், வடமாகாண சுகாதாரசேவைகள் பணிமனையின் செயலாளர்,முல்லைத்தீவு பிராந்திய சுகாதாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ-19)

## 'லீசிங்'...

கொண்டிருந்த வயோதிபப் பெண்ணிடம் மரண வீடொன்றுக்கான முகவரியைக் கேட்பதுபோல் பாசாங்கு செய்துவிட்டு, அந்தப் பெண்ணின் கழுத்தில் இருந்த ஒன்றரைப் பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், வழிப்பறியில் ஈடுபட்ட இரு இளைஞர்களையும், அவர்களுக்கு உடந்தையாகச்செயற்பட்ட இன்னும் இருவருமாக நான்குபேரை மல்லாகம் பகுதியில் வைத்து யாழ்.மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார், நேற்றுத் திங்கட் கிழமை கைதுசெய்தனர். இதன்போது அவர்களிடம் இருந்து குறித்த பெண்ணிடம் இருந்து அறுக்கப்பட்ட தங்கச் சங்கிலியையும் பொலிஸார் மீட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் "புதிதாக மோட்டார் சைக்கிள் ஒன்றை லீசிங் முறையில் வாங்கினோம். திடீரென லீசிங்பணத்தைச் செலுத்தக் கையில் காசில்லாததாலேயே இந்த வழிப்பறியில் ஈடுபட்டோம்" என்று தெரிவித்துள்ளனர். (அ-26)

## கடைக்குள்...

கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனைக்கு அருகில்) இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சிலர் மீது, குறித்த ஓட்டோ தவறுதலாக உரசிவிட்டுச் சென்றுள்ளது. இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரும் ஓட்டோவை விரட்டிச் சென்றுள்ளனர். ஓட்டோக்காரர் கடையொன்றுக்குள் தஞ்சம் புகுந்தபோதும், மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கடைக்குள் புகுந்து,அவர் மீது கத்தியால் குத்திக் காயப்படுத்தியதோடு, ஓட்டோவையும் அடித்துடைத்துவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். கத்திக்குத்துக்கு இலக்கானவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்காளர் தேவை

(பகுதி நேரம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனமொன்றில் பகுதி நேரமாகப் பணியாற்றக் கூடிய கணக்காளர் தேவை.
இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
ஆர்வமும் அனுபவமும் உடையவர் விரும்பத்தக்கது.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு: 077 120 9998

## காவலாளி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு காவலாளி தேவை. ஆர்வமும் அனுபவமும் உடையவர் விரும்பத்தக்கது.
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

தொடர்பு: 077 873 4309

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 632 3554

(CS 41071) E

## வேலையாட்கள் தேவை

- ➤ யாழ் நகரிலுள்ள வீட்டில் வயோதிபர் (ஆண்,பெண்) இருவரை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை
- ➤ வீட்டை சுத்திகரிப்பதற்கு ஆண் வேலையாள் தேவை

தொடர்பு: 077 234 9933

## பகிரங்க அறிவித்தல்

இதன் கீழ் விபரிக்கப்பட்டவாறான ஆதனம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் தனபாலன் லாவண்யா முன்னிலையில் 7236 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி – பரமேஸ்வரன் பெண் சந்திரிகா ஆகிய எனக்குச் சொந்தமானதாகும்.

ஆதனத்தின் பெயர் : 'சங்கடகடவை"
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 08 குளி 09
அளவீடு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் யு.கந்தசாமி,
இலக்கம் 08 திகதி 22.12.2025
ஆதனக்கூறு 02
அமைவிடம் : வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம்,
வலிகாமம் கிழக்குப் பகுதி,
வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு
J/271 கிராம அலுவலர் பிரிவு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்க் கோயிற்பற்று, சிறுப்பிட்டி இறை (சிறுப்பிட்டி மத்தி சமுத்தி வீதி)
எல்லைகள் : கிழக்கு – ஒழுங்கை,
வடக்கு – ஆதனக்கூறு 01 எனச் சுட்டப்பட்டுள்ள இளையதம்பி பாலசுப்பிரமணியத்தின் உரித்தாளர்களுக்கு உரிய ஆதனம்,
மேற்கு – ஒழுங்கை,
தெற்கு – ஒழுங்கை

மேற்படி ஆதனத்தினை விற்பனை செய்வதற்கான எதுவித நோக்கமும் எனக்கு இல்லை என்பதையும், அவ்வாறு விற்பனை செய்வதற்கான அறிவித்தல் எதையும் நான் பகிரங்கப்படுத்தவில்லை என்பதையும் இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன். இவ் ஆதனத்தினை விற்பனை செய்வது தொடர்பில் என்னைத் தவிர்ந்த வேறு எந்தவொரு நபராலும் செய்யப்படும் அறிவித்தல்களை எக்காரணம் கொண்டும் நம்பவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ அல்லது அவ் அறிவித்தலை நம்பிக் குறித்த ஆதனத்தினை கொள்வனவு செய்யவோ வேண்டாம் என பொதுமக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன். இவ் அறிவித்தலை மீறி வேறு எவரிடமிருந்தும் இவ் ஆதனத்தினை கொள்வனவு செய்வதால் ஏற்படும் சட்டரீதியான பின்விளைவுகளுக்கு நான் எவ்விதத்திலும் பொறுப்பாகமாட்டேன் என்பதையும் இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

பரமேஸ்வரன் பெண் சந்திரிகா

(CS/60320) J-1

## மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்.

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும். ரூபா - 35000/-

தொடர்புகளுக்கு: 076 324 9977

(CS/60312) J-1

## School Service

உரும்பிராயில் இயங்கும் சிறுவர் முன்பள்ளி (Kids park) க்கு அளவெட்டியிலிருந்து School service தை மாதத்திலிருந்து ஆரம்பமாகிறது. செல்ல விரும்புவோர், முற்பதிவு செய்து கொள்ளவும்.
(அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம்)

077 609 6581

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மத்தி சமுர்த்தி வீதியில் (வங்கி வீதியில்) 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- தார் றோட் முகப்புடன்
- இரண்டு பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பரம்பரைக் காணி, 1951ம் ஆண்டு உறுதி, தோம்பு யாவும் உண்டு.
- வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலை அமைப்பதற்கும் உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, செம்மண்தரை, நன்னீரூற்று, அமைதியான சூழல்.
- ஒரு பரப்பின் விலை பதினைந்து இலட்சம் (1500,000/=)
- பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரம்

தொடர்பு:- 076 76 38 141, 076 76 58 176


(CS 28752) A

# முதலாம் ஆண்டு நினைவுநாள் அழைப்பு

**கடந்த 10.01.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்**

## அமரர் திரு. கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)

**(வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், உரிமையாளர் - SKAT கேபிள் விஷன் (கட்டப்பிராய்), வரதன் எலக்ரிக்கல்ஸ் மற்றும் சரண்ஜா தொலைத்தொடர்பு நிலையம் (கஸ்தூரியார் வீதி))**



வருடம் ஒன்றாகியதோ!
வெஞ்சின விதி எங்கள் குலச்சூரியனை கவர்ந்து சென்று...
வலியோடும் பிரிவுத்துயரோடும் விழிமூடா
வாழ்க்கைப் பயணத்தில் எங்களை இணைத்து...
வருடம் ஒன்றாகியதோ அப்பா !!
உடைந்து போவதற்கும்
உட்கார்ந்து அழுவதற்கும் போதுமளவான
தனிமைகளை பரிசளித்து...
உங்கள் பிரிவுப் புள்ளியில் உறைந்துபோன
எங்கள் காலக்கடிகார முட்களுக்கும்
வருடம் ஒன்றாகியதோ அப்பா !!

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்
14.06.1964

மறைவு
10.01.2025

"கைலை வாசம்"
இல 66, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**
077 757 0103
076 732 0241

(CS/60318) J-1

uthayanadvt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால் ... 30.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org